# முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி
# முன்னிலை: செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்.,
# முதன்மை சார்பு நீதிபதி, பொன்னேரி.
# எம்.சி.ஓ.பி. எண். 55/2023

2026ம் ஆண்டு ஜனவரி திங்கள் 9ம் நாள் வெள்ளிக்கிழமை. இந்திய உறுதிமொழி சட்டம் (44–1969) 10வது விதி 4ம் பிரிவின் கீழ் முதன்மை சார்பு நீதிபதி செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்., அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.
ம.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. தயாளன் | | |
| த/பெ. | கணேசன் | வட்டம் | ஊத்துக்கோட்டை |
| கிராமம் | அக்கரப்பாக்கம் | வயது | 41 |
| தொழில் | ஓட்டுநர் | மாவட்டம் | திருவள்ளூர் |

## முதல் விசாரணை

1. நான் இந்த வழக்கில் மனுதாரர் ஆவேன். இந்த வழக்கின் சங்கதிகள் அனைத்தையும் நான் நன்கு அறிவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை நான் பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தாயரிக்கப்பட்து அந்த விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடைய தான். ம.சா.ஆ 1 முதல் 8வரை எனது தரப்பு சான்று ஆவணங்களாக குறியீடு செய்யதுள்ளேன்.

**<u>மனுதாரர் தரப்பு சான்று ஆவணங்கள்</u>**

| | |
|---|---|
| ம.சா.ஆ 1 | முதல் தகவல் அறிக்கை நகல் |
| ம.சா.ஆ 2 | வாகன் பதிவு புத்தகம் நகல் |

| | |
|---|---|
| ம.சா.ஆ 3 | இன்சூரன்ஸ் பாலிசி நகல் |
| ம.சா.ஆ 4 | விபத்து பதிவேட்டு நகல் |
| ம.சா.ஆ 5 | மருத்துவ விடுவிப்பின் சுருக்கம் அசல் |
| ம.சா.ஆ 6 | மனுதாரர் ஓட்டுநர் உரிமம் நகல் |
| ம.சா.ஆ 7 | கதிரியக்கப்படம் அசல் |
| ம.சா.ஆ 8 | தொடர் சிகிச்சை ஆவணம் நகல் |
| நி.ம.சா.ஆ.1 | மனுதாரரின் ஊனச் சான்றிதழ் அசல் |

**குறுக்கு விசாரணை.**

08.11.2022 அன்று நான் வண்டிக்காவனூரில் பிரகாஷ் ரைஸ்மில் அருகே நடந்து சென்றுக்கொணடிருந்த போது எனது பின்னால் வந்த இருசக்கர வாகனம் என் மீது மோதிவிட்டது. விபத்தில் எனது இடது கால் முட்டுக்கு கீழ் இரண்டு எலும்பு முறிவு ஏற்பட்டது. பாடியநல்லூர் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்றேன். அதன் பிறகு ஸ்டான்லி மருத்துவமனையில் 12 நாட்கள் உள் நோயாளியாக சிகிச்சை பெற்றேன். அங்கு எனக்கு இடது காலில் அறுவை சிகிச்கை செய்து ராடு பொருத்துயுள்ளார்கள். என் மீது மோதிய இருசக்கர வாகனத்தின் பதிவு எண் TN-18-BD-0590. விபத்து குறித்து எனது மனைவி புகார் கொடுத்தார். புகார் கொடுத்தலில் இரண்டு நாட்கள் காலதாமதம் உள்ளது என்றால் சரிதான். நான் என்மீது மோதிய வாகனத்தின் ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவரிடம் ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்று எனக்கு தெரியாது. விபத்து சமயத்தில் நான் டாடா ஏசி வாகனம் ஓட்டிவந்தேன். அப்போது எனக்கு வயது 38. மாதம் ரூ.20,000/- சம்பாதித்தேன். எனது தொழில் வருமானம் குறித்து ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வேறு நீதிமன்றத்தில்

சாட்சியம் அளிக்கவில்லை. விபத்திற்கு நான்தான் காரணம் என்றும் நான் தவறான இடத்தில் சாலையை கடந்ததால் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வாகன ஓட்டுநரிடம் ஓட்டுநர் உரிமம் இல்லாததால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு தரவேண்டியது இல்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட சொற்ப காயம் குணமாகிவிட்டது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

| |
|---|
| சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறு என்னால் தட்டச்சுருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம்/ கைரேகை பெறப்பட்டது. |

முதன்மை சார்பு நீதிபதி,
பொன்னேரி